**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 179 of 2024

DATE : 28.10.2025

Depositions of witness for Prosecution

PW :3

| | | | |
|---|---|---|---|
| Name | பெருமாள் | Caste | |
| Father/Husband's Name | கருப்பையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of October 2025

**(4 முதல் 6 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு.கார்த்திக்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

1) நான் மகாராஜாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். ஆஜர் எதிரிகளையும் வழக்கில் மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும். கடந்த 16.08.2020 அன்று ஒரு மணி அளவில் சண்டை போட்டார்கள். நாங்கள் விலக்கிவிட்டோம். மாலை 5 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் இரண்டு எதிரிகளும், மற்ற மூன்று எதிர்களும் சேர்ந்து என்னை அடித்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக முதலில் காவல் நிலையம் சென்றேன். அதன் பின்பு மருத்துவமனை சென்றேன். இது சம்பந்தமாக புகார் நாங்கள் கொடுத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த தெருவில் குடியிருந்து இருந்து வருகிறேன் என்றால் மேல தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் எந்த தெருவில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் மேலத்தெருவில் குடியிருந்து வருகிறார்கள். நானும் எதிரிகளும் அருகே வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் நான் என்ன வேலை பார்த்து வந்தேன் என்றால் கட்டிட வேலை பார்த்து வந்தேன். எந்த தெருவில் வேலை பார்த்து வந்தேன் என்றால் மேலத்தெருவில் தான் வேலை பார்த்து வந்தேன். நான் வேலை பார்த்து வந்ததாக சொல்லும் வீட்டின் உரிமையாளர் பெயர் என்னவென்றால் பிரகாஷ். பிரகாஷ் எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் மகன் ஆவார்.

இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் மகன் ஆவார். பிரகாஷ் மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் அண்ணன் தம்பி ஆவார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் எதற்காக நடைபெற்றது என்றால் சொத்து பிரச்சினை சம்பந்தமாக நான் வழக்கு தாக்கல் செய்ததால் இந்த பிரச்சனை ஏற்பட்டது. சொத்து எந்த இடத்தில் அமைந்துள்ளது என்றால் பட்டுப் பூச்சியில் அமைந்துள்ளது. சொத்து சம்பந்தமாக உரிமையியல் வழக்கு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் எதிரிகள் என்னை தாக்கியத்திற்காக தனிப்பட்ட முறையில் புகார் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் சுமார் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் மாலை 05.30 மணிக்கு. நான் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 06.00 மணிக்கு சென்றேன்.

ஆட்டோ பிடித்து காவல் நிலையத்திற்கு சென்றோம். காவல் நிலையத்தில் புகார் மனு எடுக்க மறுத்து விட்டார்கள் அதன் பின்னர் மருத்துவமனை சென்றோம். என்னை யார் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். என்னை யாரெல்லாம் தாக்கினார்கள் என்றால், நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் எதிரி மனோகரன் என்னை கட்டையால் தாக்கி தள்ளிவிட்டார். அச்சமயத்தில் வேறு யாரேனும் பொது மக்கள் இல்லையா என்றால் அனைவரும் கூடி

இருந்தார்கள் பயத்தில் யாரும் அருகில் வரவில்லை. சம்பவ சமயத்தில் போலீசர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் சம்பவ இடத்தில் இருந்தார்கள். யாருக்கெல்லாம் காயம் ஏற்பட்டது என்றால் எனக்கும், கார்த்திக்குக்கும் கவிதாவுக்கும் காயங்கள் ஏற்பட்டது. எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் அச்சமயம் கொரோனா காலகட்டம் என்பதால் மருத்துவமனையில் அனுமதிக்க மறுத்து விட்டார்கள்.

எனது ஊருக்கும் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஐந்து கிலோமீட்டர் தூரம் இருக்கும். சொத்து பிரச்சனை இருந்து வருவதாக சொல்வது தவறு, என்னுடைய அவர்களுக்கு பாதிக்கப்பட்ட சொத்துக்களை சுமார் 50 வருடங்களுக்கு முன்பு கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியில்லை.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 179 of 2024

DATE : 28.10.2025

Depositions of witness for Prosecution

PW :4

| | | | |
|---|---|---|---|
| Name | சந்தானம் | Caste | |
| Father/Husband's Name | கோபால் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of October 2025

**(4 முதல் 6 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு.கார்த்திக்குமார் ஆஜர்)**

முதல் விசாரணை : –

நான் மகாராஜாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். ஆஜர் எதிரிகளையும் வழக்கில் மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும். வழக்கு பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. காயம்பட்ட நபர்களை நான் மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். அது தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –

கடந்த 16.08.2020 அன்று மாலை 05.30 மணிக்கு அ.சா.1 சம்பவ இடத்தில் இருக்கும் போது வழக்கின் எதிரிகள் சொத்து சம்பந்தமாக தகராறு செய்து, தகாத வார்த்தையால் பேசி, எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.3 ஐ அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், காயம் பட்ட அவர்களை நான் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தேன் என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்த விபரம் தெரியும் என்று சொல்லிவிட்டு போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : – இல்லை

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 179 of 2024

DATE : 28.10.2025

Depositions of witness for Prosecution

PW :5

| Name | சுந்தர்ராஜ் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of October 2025

**(4 முதல் 6 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு.கார்த்திக்குமார் ஆஜர்)**

முதல் விசாரணை : –

நான் மகாராஜாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் ராணுவத்தில் வேலை பார்த்து தற்போது ஓய்வில் இருந்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். ஆஜர் எதிரிகளையும் வழக்கில் மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும். கடந்த 16.08.2020 அன்று மாலை 05.15 மணியளவில் நான் அந்த வழியாக சென்றேன். அப்பொழுது அ.சா.1 சமயபுரத்தில் இருந்த பொழுது நான் அவரை பார்த்து பேசிக்கொண்டிருந்தேன். ஏற்கனவே அவர்களுக்கும், வழக்கின் எதிரிகளுக்கும் ஒரு பிரச்சனை ஏற்பட்டு அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வந்திருந்த சமயத்தில், என்னிடம் பேசிக்கொண்டிருக்கும் பொழுது வழக்கின் எதிரிகள் அ.சா.1 யை கட்டையால் அடித்து காயப்படுத்தினார்கள். காயம்பட்ட நபரை ஆட்டோ மூலம் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். வழக்கு சம்பவத்தில் சுமார் இரண்டு நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நான் எந்த தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் மேலத்தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் எந்த தெருவில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அவர்களும் மேலத்தெருவில் தான் குடியிருந்து வருகிறார்கள். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் நானும், அ.சா.1 கார்த்திக்கும் பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அந்த இடத்தில் எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் எதற்காக நடைபெற்றது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கார்த்திக் வீடும் பிரகாஷ் என்பவரின் வீடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்ற சமயத்தில் பிரகாஷ் என்பவரின் வீட்டில் கட்டுமான வேலை நடைபெற்று வந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் அவர் வீட்டில் சுமார் 10, 15 நபர்கள் வேலை பார்த்து கொண்டிருந்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. போலீசார்கள் வழக்குச் சம்பவம் குறித்து என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல . புகார்தாரர் எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவர் ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியில்ல. வழக்கு சம்பவத்திற்கு முன்னதாக நடைபெற்ற சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியுமா என்றால் எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது. அன்றைய தினமே மதியம் சுமார் 02.30 மணி அளவில் பிரகாஷ் என்பவர் 1, 2, 3 மற்றும் 8 எதிரிகள் மீது ஒரு புகார் மனு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரகாஷ் மற்றும் கார்த்திக்

என்பவர் உறவினர் என்பதால், வழக்கில் எதிரிகள் மீது பொய்யாக ஒரு புகார் மனு கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு